2. அறிவிப்பு.

உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு (குறுக்கிடு) நான் ஒரு அறிவிப்புக் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் பேரவைக்கு ஓர் அறிவிப்பை அறிவிக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதற்கல்ல. நான் உங்களுக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அதைச் சொன்ன பிறகு சொல்லுங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை நகரக் காவல் துறை குற்றப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து எனக்குக் கீழ்க்கண்ட டெலக்ஸ் செய்தி நேற்றிரவு வரப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have the honour to state that Thiru Panruti S. Ramachandran, M.L.A. of P.M.K. party concerned in Madras City 'X, Cr.No.1899/92, U S 120-B, 124 A, 153-A (1) (a) (b) 505 (1) (6) IPC r/w 13 (1) & 13 (2) of Unlawful Activities (Prevention) Act, 1967 was arrested today (21-9-92) at 21.15 hrs. at his residence, on execution of Non-Bailable Warrant issued by Hon'ble Addl. Chief Metropolitan Magistrate (I/C) Egmore, Madras-8. He is being sent for judicial custody."

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை, உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உட்காருங்கள். இதிலே ஒன்றும் கிளாரிபிகேஷன் இல்லை. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஜி. பழனிசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர்....

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர். திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். திரு. சிங்காரம் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டிருக்கிறார். உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டிருக்கிறார். பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனுக்கு முன்னால் பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள், திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டரில் இன்னொரு உறுப்பினரைப் பற்றி (குறுக்கீடு) அவர் இங்கே அமர்ந்து இருக்கிறார். (குறுக்கீடு) அதைப் பற்றி எனக்கு எந்தத் தகவலும் வராமல் நீங்களோ மற்றவர்களோ கவலைப்பட வேண்டியதில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

3. சிறப்புக் குறிப்புகள்.

(அ) காவல் துறையினர் தாக்குதலுக்கு இலக்காவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர்.

*திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தங்களிடத்திலே அனுமதி கோரியிருக்கிறேன். அண்மைக்காலததில் காவல் துறையினர் தாக்குதலுக்கு இலக்காவது அதிகரித்து வருகிறது. சென்ற ஆண்டு மட்டும் 1,431 பேர், காவல் துறையைச் சார்ந்தவர்கள் கொல்லப்பட்டு இருப்பதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. தமிழகத்தில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அறிவிப்பை நான் கொடுத்து விடுகிறேன். தங்களைப் போல மேலும் 20 உறுப்பினர்கள் நேற்றையதினமும் இன்றைய தினமும் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும் பலர் கொடுத்திருக்கிறார்கள். நேற்றைய தினம் அதற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். ஆனால் இன்றைய தினம் ''ஸ்பெஷல் மென்ஷன்'' என்கிற வகையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என அனுமதித்து இருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்களோடு, திரு. குமரி அனந்தன், திரு. எஸ்.டேனியல்ராஜ், திருமதி லதா பிரியகுமார், திருமதி ஜெ. லோகாம்பாள், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. மா. சுந்தரதாஸ், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு.கே.கே. சின்னப்பன், திரு. வே. தம்புசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஜி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.